# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

**அசல் வழக்கு எண் 135/2014**

பெயர்: தங்கவேல் நாள்: 29.11.2022

வா.சா.1 – 5 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை.

வா.சா.1 – தங்கவேல் - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

5 ம் பிரதிவாதியை எதற்காக இந்த வழக்கில் சேர்த்துள்ளேன் என்பதை வழக்குரையில் குறிப்பிட்டு கூறவில்லை என்று சொன்னால், கூறியுள்ளேன். முதன்மை சாட்சியத்தில் 5 ம் பிரதிவாதியை எதற்காக இந்த வழக்கில் சேர்த்துள்ளேன் என்றும், அவருக்கு எதிராக எவ்வாறு வழக்குமூலம் ஏற்பட்ட்து என்றும் குறிப்பிட்டு கூறியுள்ளேனா என்றால், 5 ம் பிரதிவாதி சர்வே எண் 94/13C ஐ அவருக்கு சொந்தமானது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார், அதனால் அவரை ஒரு தரப்பினராக சேர்த்துள்ளேன். 5 ம் பிரதிவாதி தாக்கல் செய்த வழக்கின் விபரத்தை வழக்குரையில் கூறியுள்ளேனா என்றாலும், அவர் தாக்கல் செய்த வழக்கின் வழக்குரையை இந்த நீதிமன்றத்தில் சான்றாவணமாக இந்த நீதிமன்றததில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. அதேபோல் வழக்குரையில் சர்வே எண் 94/13C ல் 5 ம் பிரதிவாதி அவருக்கு உரிமையானது என்று கூறுவதால்தான் அவரை ஒரு தரப்பினராக சேர்த்துள்ளேன் என்று கூறியுள்ளேனா என்றால், தெரியவில்லை. நான் அவ்வாறு குறிப்பிட்டு சொல்லவில்லை என்றாலும், அதனால்தான் தெரியவில்லை என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி எனது பாட்டனார் கொழந்தாகவுண்டர், 5 ம் பிரதிவாதியின் தகப்பனார் ஆறுமுககவுண்டர் மற்றும் ஒரு மாரிகவுண்டர் ஆகியோர்கள் கிரையம் பெற்ற சொத்துதான் இந்த வழக்கு சொத்து என்றுதான் வழக்காடுகிறோம் என்றால், சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி ஒரு தாக்கில் புஞ்சை ஏக்கர் 2.75 ல் 3 ல் 1 பங்கும், 2 வது தாக்கு 3 ஏக்கரில் பொதுவில் 3 ல் 1 பங்கும் கிரையம் பெற்றதாக உள்ளது என்றால், சரிதான். வா.சா.ஆ.1 ஆவணப்படி கிரையம் பெற்ற 3 நபர்களும் எப்பொழுது எவ்வாறு பிரித்துக்கொண்டார்கள் என்றோ, எந்தெந்த சொத்துக்கள் யார் யாருக்கு ஒதுக்கப்பட்டது என்றோ, வழக்குரை மற்றும் முதன்மை சாட்சியத்தில் கூறியுள்ளேனா என்றால், 1957 ம் ஆண்டி வாக்கில் வாய்மொழியாக பாகம் பிரித்து கொண்டார்கள் என்று மட்டுந்தான் கூறியுள்ளேன். வாய்மொழி பாகத்தின்படி யார் யாருக்கு எந்த சர்வே நெம்பரில் எவ்வளவு நிலம் கொடுக்கப்பட்டது என்று குறிப்பிட்டு

கூறியுள்ளேனா என்றால், இல்லை. தற்போதாவது மேற்படி மாரிகவுண்டருக்கும், ஆறுமுககவுண்டருக்கும் எந்தெந்த சர்வே எண்களில் எவ்வளவு நிலங்கள் வாய்மொழியாக கொடுக்கப்பட்டது என்ற விபரத்தினை கூறமுடியுமா என்றால், வாய்மொழியாக எவ்வளவு நிலம் பிரிக்கப்பட்டது என்று விபரம் எனக்கு தெரியாது. இனாம் ஒழிப்பு சட்டத்தின்படி 1967 ல் கொடுக்கப்பட்ட பட்டா வா.சா.ஆ.25 ஆவணப்படி வழங்கப்பட்ட பட்டாக்கள் சரியானவையா என்றால், சரியானவைதான். வா.சா.ஆ.25 ஆவணப்படி எனது தாத்தா கொழந்தாகவுண்டருக்கு சர்வே எண் 94/22 ல் 0.02.0 ஏர்ஸ்-ம் மற்றும் 95/5 ல் 0.18.5 ஏர்ஸ் நிலமும் ஆக மொத்தம் 0.20.5 ஏர்ஸ் நிலத்திற்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். அதேபோல் 5 ம் பிரதிவாதியின் தகப்பனார் ஆறுமுககவுண்டருக்கு சர்வே எண் 94/2 ல் 0.03.5 ஏர்ஸ். 94/9 ல் 0.03.0 ஏர்ஸ். 94/11 ல் 0.04.5 ஏர்ஸ். 94/18 ல் 0.04.5 ஏர்ஸ், 94/27 ல் 0.04.5 ஏர்ஸ் ஆக மொத்தம் 0.20.0 ஏர்ஸ் நிலத்திற்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். அதேபோல் அந்த சமயத்தில் மாரிகவுண்டர் காலமாகி விட்டதால் அவருடைய மகன் காளியண்ணகவுண்டருக்கு 95/7 ல் 0.10.5 ஏர்ஸ், 95/21 ல் 0.03.0 ஏர்ஸ், 95/25 ல் 0.05.5 ஏர்ஸ் ஆக மொத்தம் 0.19.0 ஏர்ஸ் நிலத்திற்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். மேற்கண்டவாறுதான் எனது தாத்தா கொழந்தாகவுண்டர், 5 ம் பிரதிவாதியின் தகப்பனார் ஆறுமுககவுண்டர் மற்றும் மாரிகவுண்டர் வாரிசு காளியண்ணகவுண்டர் ஆகியோர்கள் வா.சா.ஆ.1 ன்படி கிரையம் பெற்ற சொத்துக்களை அனுபவித்து வந்தார்கள் என்று சொன்னால், சரிதான். மேற்படி நிலங்கள் தவிர எனது தாத்தா கொழந்தாகவுண்டருக்கு சர்வே எண் 97/6, 103/11, 102/1 ஆகியவைகளில் நிலங்கள் உள்ளது என்றால், சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் சர்வே எண் 97/6 க்கான பட்டா என்று சொன்னால், சரிதான். 28.11.2022 தேதியிட்ட புல எண் 97/6 ன் பட்டா எண் 433 க்கான இணைய வழி நகல் **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் சர்வே எண் 103/11 க்கான பட்டா என்று சொன்னால், சரிதான். 28.11.2022 தேதியிட்ட புல எண் 103/11 ன் பட்டா எண் 436 க்கான இணைய வழி நகல் **பி.வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் சர்வே எண் 102/1 க்கான பட்டா என்று சொன்னால், சரிதான். 28.11.2022 தேதியிட்ட புல எண் 102/1 ன் பட்டா எண் 130 க்கான இணைய வழி நகல் **பி.வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்கண்ட நிலங்களுக்கு இன்றைய தேதி வரை கந்தாயம் செலுத்தி

வருகிறேன் என்றால், சரிதான். சர்வே எண் 94/20 ல் பொது வண்டித்தட பகுதிக்கான பட்டாதான் என்னிடம் காட்டப்படும் ஆவணம் என்றால், சரிதான். 28.11.2022 தேதியிட்ட சர்வே எண் 94/20 ன் பட்டா எண் 565 க்கான இணைய வழி நகல் **பி.வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதை தவிர புள்ளாக்கவுண்டம்பட்டி கிராமம் சர்வே எண் 94/37C ல் எனது வீடும், எனது சித்தப்பா 2 ம் பிரதிவாதிா ராஜு வீடும் உள்ளது என்றால், சரிதான். வா.சா.ஆ.4 ஆவணத்தில் பக்கம் 4 ல் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சகல சொத்துக்களையும் சேர்த்து பாகம் பிரித்துக்கொள்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். வா.சா.ஆ.4 ஆவணத்தில் பி.வா.சா.ஆ.1 முதல் 3 ஆவணத்தில் உள்ள பூர்வீக சொத்துக்களையும், சர்வே எண் 94/37C ல் உள்ள வீட்டையும், வீட்டு நிலத்தையும் சேர்க்கவில்லை என்று சொன்னால், சரிதான். மேற்படி சொத்துக்களை ஏன் பாகப்பிரிவினை பத்திரத்தில் சேர்க்கவில்லை என்ற விளக்கத்தை வா.சா.ஆ.4 ஆவணத்திலோ அல்லது வழக்குரையிலோ கூறவில்லை என்று சொன்னால், வழக்கிற்கு தேவையில்லை என்பதால் கூறவில்லை. வா.சா.ஆ.4 ஆவணத்தை இந்த வழக்கை தாக்கல் செய்யும் பொருட்டு ஏற்படுத்திக் கொண்டததால்தான் அதில் அனைத்து சொத்துக்களையும் குறிப்பிடாமல், வழக்கு சொத்துக்களை மட்டும் குறிப்பிட்டு மோசடியாக ஏற்படுத்தியுள்ளோம் என்று சொன்னால், சரியல்ல. பூர்வீக சொத்துக்களில் எனக்கு பாகம் உள்ளது என்ற அடிப்படையில்தான் வா.சா.ஆ.4 ஆவணத்தில் ஒரு தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளேன் என்றால், சரிதான். 2 ம் பிரதிவாதி ராசு மகன் சதீஸ்குமார் என்பவரை வா.சா.ஆ.4 ஆவணத்தில் தரப்பினராக சேர்க்கவும் இல்லை, இந்த வழக்கில் அவரை வாதியாகவும் சேர்க்கவில்லை என்று சொன்னால், சரிதான். என்னுடைய வழக்குபடி சதீஸ்குமாருக்கு இந்த வழக்கு சொத்துக்களிலும், பூர்வீக சொத்துக்களிலும் பாகம் உள்ளது என்றால், சரிதான். சதீஸ்குமாரை ஏன் வா.சா.ஆ.4 ஆவணத்தில் தரப்பினராக சேர்க்கவில்லை என்பதற்கும், வழக்கில் ஏன் தரப்பினராக சேர்க்கவில்லை என்பதற்கான விளக்கத்தினை வழக்குரையிலோ, முதன்மை சாட்சியத்திலோ கூறவில்லை என்று சொன்னால், சரிதான். ஆகையால் வழக்கு சொத்துக்களில் சதீஸ்குமாருக்கும் ஒரு பாகம் உள்ளதால், வாதிகளாகிய நாங்கள் மட்டுமே முழு உரிமையாளர்கள் இல்லையென்று சொன்னால், சரிதான். விளம்புகை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ள நிலையில், மேற்படி சதீஸ்குமாரை வழக்கு தரப்பினராக சேர்க்காத நிலையில், இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால், சரியல்ல. வா.சா.ஆ.4 ஆவணத்தில் இணைக்கப்பட்டுள்ள

வழக்கு சொத்துக்களான பட்டா எண் 125 ல் 2, 3, 4 நபர்களாக ருக்மணி, பழனியப்பன், சாந்தாமணி என்ற நபர்கள் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். இன்றைய தேதி வரையிலும் பட்டா எண் 125 ல் மேற்படி 3 நபர்களின் பெயர்கள் உள்ளது என்றால், சரிதான். அவர்கள் யார் என்றோ அல்லது வழக்கு சொத்தில் எவ்வாறு உரிமையுள்ளது என்றோ வழக்குரை மற்றும் வா.சா.ஆ.4 ஆவணத்திலும் கூறவில்லை என்று சொன்னால், சரிதான். அந்த நபர்களின் பெயரை நீக்கம் செய்வதற்கு இன்றைய தேதி வரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லையென்றால், சரிதான். அந்த நபர்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லையென்றால், சரிதான். அந்த நபர்களுக்கு சொத்தில் உரிமையில்லையென்று வழக்குரை மற்றும் முதன்மை சாட்சியத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லையென்றால், சரிதான். பட்டா எண் 125 ல் உள்ள கூட்டு பட்டாதாரர்களை இந்த வழக்கில் சேர்க்காத நிலையில், வாதிகளாகிய நாங்கள் மட்டுமே வழக்கு சொத்துகளுக்கு முழு உரிமையாளர்கள் என்று கூறி தாக்கல் செய்துள்ள வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால், சரியல்ல.

5 ம் பிரதிவாதியின் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1 ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

ஒப்பம் / தங்கவேல்

ஒப்பம்/ திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
சங்ககிரி.